# தமிழ்நாடு தகவல் ஆணையம்

எண்.19, அரசு பண்ணை கிராமம், பேர்ன்பேட்டை, நந்தனம், சென்னை - 600 035.
(Pension Pay Office Back Side) (சைதாப்பேட்டை மெட்ரோ ரயில் நிலையம் அருகில்), தொலைபேசி: 044-29515580

ஆணை நாள் 05.06.2026

முன்னிலை

**திரு.ரா.பிரியகுமார், பி.எஸ்.சி, பி.எல்.,**

**மாநிலத் தகவல் ஆணையர்**

*****

**வழக்கு எண். NC 253/B/2024 (SA 8016/C/2023)**

திரு.G.கார்த்திகேயன் — மேல்முறையீட்டாளர்

/எதிர்/

பொதுத் தகவல் அலுவலர் /
மாநகராட்சி உதவி பொறியாளர்,
(பொறியியல் பிரிவு),
ஆவடி மாநகராட்சி,
ஆவடி,
சென்னை - 600054. — பொது அதிகார அமைப்பு

**ஆணை**

இவ்வழக்கின் மீது இவ்வாணையத்தில் இன்று (05.06.2026) நடத்தப்பட்ட விசாரணைக்கு மனுதாரர் திரு.G.கார்த்திகேயன் அவர்கள் ஆஜரானார். பொது அதிகார அமைப்பின் சார்பாக செல்வி.G.நிவேதிதா, உதவிப் பொறியாளர், பொறியியல் பிரிவு, ஆவடி மாநகராட்சி, சென்னை அவர்கள் உரிய அங்கீகார கடிதம் ஏதும் இல்லாமல் ஆஜரானார்.

2. மனுதாரர், தகவல் பெறும் உரிமைச் சட்டம், 2005 பிரிவு 6(1)-இன் கீழ் 17.02.2023 தேதியிட்டு, ஆவடி மாநகராட்சி 48 வார்டுகளில் உள்ள பூங்காக்கள் மற்றும் அவை அமைந்துள்ள இடங்கள், இந்த பூங்காக்கள் அமைக்கப்பட்டு மக்களின் பயன்பாட்டிற்காக திறக்கப்பட்ட தேதிகள் உள்ளிட்டவற்றை தகவலாக வழங்க கோரி மொத்தம் 8 இனங்களில் தகவல் வழங்க கோரியும், தகவல் பெறும் உரிமைச் சட்டம் 2005, பிரிவு 2(j)-இன் கீழ் கள ஆய்வு செய்ய அனுமதி வழங்க கோரியும் தாக்கல் செய்த மனுவின் மீது 02.05.2023 தேதியிட்டு தகவல் பெறும் உரிமை சட்டம் 2005, பிரிவு 19(3)-இன் கீழ் இரண்டாம் மேல்முறையீட்டு மனு (SA 8016/C/2023) தாக்கல் செய்துள்ளார். இம்மேல்முறையீட்டு மனுவின் மீது 11.01.2024 அன்று இவ்வாணையத்தால் விசாரணை மேற்கொள்ளப்பட்டு பிறப்பிக்கப்பட்ட உத்தரவின் மீது, 22.04.2024 தேதியிட்டு மனுதாரர் தாக்கல் செய்துள்ள ஆணை நிறைவேற்றப்படாமை மனுவின் (NC 253/B/2024) அடிப்படையில் இவ்வழக்கு இன்று (05.06.2026) விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது.

3. இன்றைய விசாரணையில் ஆஜரான மனுதாரர், தான் கோரிய Work Order நகல்களை வழங்கப்பட்டுவிட்டது என்றும், ஒப்பந்த நகல் மட்டும் வழங்கப்படவேண்டும் என்றும் தெரிவத்து, அதனை பெற்றுத்தருமாறு கேட்டுக்கொண்டார்.

4. இன்றைய விசாரணையில் பொதுத் தகவல் அலுவலர் சார்பாக ஆஜரான செல்வி.G.நிவேதிதா, உதவிப் பொறியாளர், பொறியியல் பிரிவு, ஆவடி மாநகராட்சி, சென்னை அவர்கள் எந்தவித ஒப்புதல் கடிதத்தையும் ஆணையத்தின் முன்பு சமர்ப்பிக்கவில்லை. இவ்வழக்கு குறித்த எந்தவித கோப்புகளும், உரிய ஆவணங்களும் இல்லாமலும், தான் எந்த வழக்கிற்கு ஆஜராகிறோம் என்று அறியாமலும், இரண்டு தாள்களை மட்டும் ஆணையத்தின் முன்பு சமர்ப்பித்து இன்றைய விசாரணைக்கு ஆஜராகி, ஆணையத்தின் நேரத்தை வீணடித்துள்ளார். இதனை இவ்வாணையம் கண்டிக்கிறது. எனவே, இவ்வழக்கிற்கு தகவல் பெறும் உரிமைச் சட்டம் 2005, பிரிவு 19(8)(a)(ii)-இன்படி ஆணையர், ஆவடி மாநகராட்சி அவர்களை பொதுத் தகவல் அலுவலராக இவ்வாணையம் நியமித்து, ஆவணங்கள் அடிப்படையிலும், கீழ்க்கண்டவாறு ஆணை பிறப்பிக்கப்படுகிறது:

1. ***ஆணையர், ஆவடி மாநகராட்சி அவர்கள், மனுதாரர் 17.02.2023 தேதியிட்ட சட்டப்பிரிவு 6(1) மனுவில் கோரும் ஒப்பந்தங்களின் நகல்களையும் தகவலாக சட்டப்பிரிவ 7(6)-இன் கீழ் கட்டணமின்றி, சான்றொப்பமிட்டு, விரைவு அஞ்சலில் மனுதாரருக்கு அனுப்பி அதன் நகலையும், மனுதாரர் தகவல்களை பெற்றுக்கொண்டதற்கான விரைவு அஞ்சல் சான்றின் நகலையும், இவ்வழக்கு குறித்து ஏற்கனவே மனுதாரருக்கு வழங்கப்பட்ட தகவலின் நகலையும் இணைத்து, ஒரு அறிக்கையாக தயார் செய்து, இவ்வாணையத்திற்கு 12.06.2026 அன்று நேரடியாக ஆஜராகி சமர்ப்பிக்குமாறு உத்தரவிடப்படுகிறது.***

**ஓம்/-ரா.பிரியகுமார்**
**மாநிலத் தகவல் ஆணையர்**

**//ஆணையத்தின் ஆணைப்படி//**

**உதவிப் பதிவாளர்**

**<u>வழக்கு எண். NC 253/B/2024 (SA 8016/C/2023)</u>**
**<u>பெறுநர்</u>**
**<u>பொது அதிகார அமைப்பு:</u>**

ஆணையர்,
ஆவடி மாநகராட்சி,
ஆவடி,
சென்னை - 600054.

பொதுத் தகவல் அலுவலர் /
மாநகராட்சி உதவி பொறியாளர்,
(பொறியியல் பிரிவு),
ஆவடி மாநகராட்சி,
ஆவடி,
சென்னை - 600054.

**<u>மனுதாரர்:</u>**
திரு.G.கார்த்திகேயன்,
பிளாட் எண். 1969,
T.N.H.B, ஆவடி,
சென்னை - 600054.

Copy to: File
AK/PC

தகவல் அறியும் உரிமைச் சட்டம் 2005